2000 மே 11]

584—

விவசாயத் துணை நிலையம்

***30717—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கண்டமங்கலம் தொகுதி, கோண்டூர் கூட்டுப் பாதையில் விவசாயத் துணை நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கண்டமங்கலம் ஒன்றியம், கோண்டூர் கூட்டுப் பாதையில் விவசாயத் துணை நிலையம், வேளாண்மை விரிவாக்கத் துணை நிலையம் தொடங்க இதற்கு முன் கோரிக்கையோ அல்லது வேளாண்மை இயக்குநரிடமிருந்து கருத்துருவோ வரப்பெறவில்லை. எழுப்பப்பட்டுள்ள வினாவினைக் கவனத்தில் கொண்டு, வேளாண்மை இயக்குநரிடம் அறிக்கை பெற்று, ஆய்வுசெய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அளித்த பதிலுக்கு, தொகுதி சார்பாக மிகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 585, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

585—

தோட்டக்கலைப் பிரிவு அலுவலகம்

***30718—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் தோட்டக்கலைத் துறையின் பிரிவு அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,